**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2024ம் ஆண்டு மார்ச் மாதம் 2 -ம் நாள் சனிக்கிழமை**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054, ஸ்ரீ சோபகிருது வருடம், மாசி மாதம் 19 -ம் நாள்**
**இ.ம.எண்.12/2023 இன் இ.ம.எண்.1/2023 இன் மு.வ.எண். 9/2019**

இப்ராஹிம் அலி ... மனுதாரர் / மனுதாரர்/ 1ம் பிரதிவாதி

...எதிர்...

1. உம்மசலீமா ... 1ம் எதிர்மனுதார்/1ம் எதிர்மனுதார்/வாதி

2. பல்கீஸ்பீவி
3.ஜக்காரியா
4. புகர்தீன்
5. நைனார்
6. அப்பாஸ்அலி ...2 முதல் 6 எதிர்மனுதார்கள்/ .2 முதல் 6 எதிர்மனுதார்கள்/ 2 முதல் 6

பிரதிவாதிகள்
7. ஹபிபுல்லாசேட்
8. சித்திக்
9. அப்துல்கரீம்
10. ஒலிராஜா .....7 முதல் 10 எதிர்மனுதார்கள்/ சேர்க்கப்பட வேண்டிய பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 29.02.2024 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் / மனுதாரர்/ 1ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.ஏ.வீரபாண்டி அவர்கள், ஆஜராகியும், 1ம் எதிர்மனுதார்/1ம் எதிர்மனுதார்/வாதிக்காக வழக்கறிஞர் திரு.டி.முத்துராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/ 2ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.என்.ஆர்.சரஸ்வதி அவர்கள் ஆஜராகியும், 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில், 3 ம் எதிர்மனுதாரர்/ 3 ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், 5, 6, 9 ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜர் இல்லாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், 7, 8, 10 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஹபிபுர் ரஹ்மான், திரு.எம்.ராமலிங்கம் ஆகியோர்கள் ஆஜராகியும் உரிய வாய்ப்பளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், மனுதாரர்தரப்பு வாதங்கள் கேட்டும், மனுதாரர்தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இறந்துபோன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை 7 முதல் 10 எதிர்மனுதாரர்களாக

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.03.02 17:50:31 +0530

சேர்ப்பதில் மனு தாக்கல் செய்யவதில் ஏற்பட்ட 740 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி உ.ந.ச. பிரிவு 151ன் கீழ் மனு தாக்கல்.

**2) <u>மனு அபிடவிட்டின் சுருக்கம்:</u>**

அசல்வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் எழுவினா வனையப்பட்டு, மனுதாரர்கூடுதல் சாட்சியம் அளிக்க மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது, 4ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என தெரிய வந்ததால், அவரது வாரிசுகளை இடைமனுவில் 7 முதல் 10 எதிர்மனுதாரர்களாக சேர்க்க வேண்டியுள்ளது. கொரோனா தொற்று காரணமாகவும், வெளியூரில் வேலை பார்த்து வந்ததாலும் உரிய நேரத்தில் மனு தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை 7 முதல் 10 எதிர்மனுதாரர்களாக சேர்ப்பதில் மனு தாக்கல் செய்யவதில் ஏற்பட்ட 740 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி மனு தாக்கல்.

**3) 7, 8, <u>10 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:</u>**

மனு ஆட்சேபிக்கப்படுகிறது. 9ம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் உள்ளார். வெளிநாட்டில் உள்ள 9ம் எதிர்மனுதாரருக்கு உ.ந.மு.சட்டம் கட்டளை 5 விதி 25 ன் கீழ் நடவடிக்கை எடுக்காமல் இம்மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. 4ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டார் என மனு குறுந்தலைப்பில் காட்டப்படவில்லை. 4ம் எதிர்மனுதாரர் 26.05.2021 ம் தேதி இறந்துவிட்டதாக தவறாக சொல்லப்பட்டுள்ளது. உண்மையில் அவர் 27.05.2021ம் தேதி இறந்ததாக இறப்புச்சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4)** 1, 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுப்புரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 5, 6, 9 ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜர் இல்லாததால் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளனர். 7, 8, 10 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் உரிய வாய்ப்பளித்தும் மறுப்புரை தாக்கல் செய்யாததால் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளனர்.

<u>5 ) பிரச்சனை:</u>

இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா, இல்லையா என்பதே ஆகும்.

**6)** 4 ம் பிரதிவாதியான புகர்தீன் கடந்த 26.05.2021ம் தேதி இறந்துவிட்டதால், இறந்து போன 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை 7 முதல் 10 எதிர்மனுதாரர்களாக சேர்ப்பதில் மனு தாக்கல் செய்யவதில் ஏற்பட்ட 740 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மனுவை அனுமதிக்கக் கோரி வாதிடப்பட்டது. 4ம் எதிர்மனுதாரர் 26.05.2021 ம் தேதி இறந்துவிட்டதாக தவறாக சொல்லப்பட்டுள்ளதாகவும், உண்மையில் அவர் 27.05.2021ம் தேதி இறந்ததாக இறப்புச்சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் எனவே மனுவை தள்ளுபடி செய்யக் கோரி வாதிடப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.03.02 17:50:45 +0530

**7)** அசல்வழக்கில் ஏற்கனவே 4 ம் பிரதிவாதியாக உள்ள புகர்தீன் இறந்துவிட்ட நிலையில் அவரது வாரிசுகளை 7 முதல் 10 எதிர்மனுதாரர்களாக சேர்க்க அனுமதிப்பதே இவ்வழக்கின் சூழ்நிலைகளுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இறப்புத்தேதியை தவறாக ஒரு நாள் முன்னிட்டு குறிப்பிட்டிருப்பதால் மட்டுமே இம்மனுவை ஏற்றுக் கொள்ள இயலாது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏற்கனவே அசல்வழக்கு கடந்த 2011ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு சுமார் 13 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வரும் நிலையில், தேவையற்ற காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் சுமார் 2 ஆண்டுகள் கழித்து காலதாமதமாக தவறான இறந்த தேதி குறிப்பிட்டு, இம்மனு தாக்கல் செய்து, எதிர்மனுதாரர்களை அலைக்கழிவு செய்ததற்கு, 1, 2, 3 மற்றும் 7, 8, 10 எதிர்மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு ரூ.500/-ம், 1, 3 எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.500/-ம், 7, 8, 10 எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.500/-ம், ஆக மொத்தம் ரூ.1,500/- ஐ வரும் 12.03.2024 ம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கொடுக்கும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தானாக தள்ளுபடி ஆகும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 12.03.2024

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 2 -ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.03.02 17:50:57 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>:- இல்லை.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் இல்லை.</u>

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2024.03.02 17:51:08 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்.**